


# நூல் அரங்கம்

## வரப்பெற்றோம்

**கரிசல் காட்டின் கவிதைச் சோலை பாரதி (பாரதி நினைவு நூற்றாண்டு சிறப்பு வெளியீடு –2021) – பதிப்பாசிரியர்: வழக்கறிஞர் கே.எஸ். இராதாகிருஷ்ணன்;** பக். 646; ரூ. 600; கலைஞன் பதிப்பகம், சென்னை–17; ✆044–28340488.

**கம்பநாடர் புதிய வெளிச்சம்– முனைவர் தெ.ஞானசுந்தரம்;** பக்.210; ரூ.210; சந்தியா பதிப்பகம், அசோக் நகர், சென்னை–83; ✆044– 24896979.

**பூ அவிழும் சமிக்ஞை (கவிதைகள்)–தரன்;**பக்.96;ரூ.100; தமிழ்ச் செருக்கு பதிப்பகம், வானகரம்,சென்னை–95.

**ஞானப்பிரான் தந்த ஞானப்பிரான் – காயார் கோமடம் (எ) ஸ்ரீ துரைதாஸன் ஸேஷாத்ரி;** பக். 182; ரூ.160; சங்கப் பலகை வெளியீடு, 44பி, சுந்தர நிவாஸ், வாசு லே அவுட், கோபிச்செட்டிபாளையம், ஈரோடு (மா).

**ஜெயலக்ஷ்மியின் இறுதித் தீர்ப்பு – பத்மினி கணேசன்;** பக். 144; ரூ.150; தி ரைட் பப்ளிஷிங், சென்னை–17; ✆044–24332682.

**பயங்கரவாதமும் தீர்வுகளும் – பொ.லாசரஸ் சாம்ராஜ்;** பக். 544; ரூ.500; மணிவாசகர் பதிப்பகம், சென்னை–104; ✆044–2536 1039.

**இசையந்தி( நாவல்) – யாரோ ஒருவன் (மு.குமரேசன்);** பக். 141; ரூ.120; எஸ்.அமுதவனிதா பதிப்பகம்,செஞ்சி; ✆78717 57881.

**மங்கோலியப் பேரரசன் செங்கிஸ்தான்– ஜெகாதா;** பக். 136; ரூ.130; நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை–17; ✆044-2834 3385.

**பாரதம் போற்றிய சாதனைப் பெண்மணிகள்– சிவபாரதி;** பக். 120; ரூ.100; யூஎம்ஐ புக் பேங்க், சென்னை–109; ✆90430 50699.

***தமிழர் நாகரிகமும் தமிழ்மொழி வரலாறும் (பத்து தொகுதிகள்– அரங்க இராமலிங்கம்; பக். 4,330 (பத்து தொகுதிகளும் சேர்த்து); ரூ.1,600, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 600 017; ✆044 – 2814 0347.***




தமிழில் தொகுப்பு நூல் வருவது புதிதன்று. புலவர்கள் பாடிய பாடல்களைப் பின்னொரு காலத்தில் அறிஞர்கள் தொகுத்துப் பாதுகாத்துள்ளனர். அவை, பாடலின் பொருள் அடிப்படையிலும், திணை அடிப்படையிலும், யாப்பு அடிப்படையிலும், எண் அடிப்படையிலும், எழுதப்பட்ட காலத்தின் அடிப்படையிலும் தொகுக்கப்பட்டன.

இந்த நூலில், தமிழர் பண்பாடு, தத்துவம், இல்வாழ்க்கை, ஆட்சிமுறை, கட்டடக்கலை போன்றவை குறித்தும், தமிழின் தோற்றம் – வளர்ச்சி, வரலாறு, இலக்கிய வரலாறு குறித்தும் பதினாறு அறிஞர்கள் எழுதியுள்ள நீண்ட கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

மா. இராசமாணிக்கனாரின் கட்டுரையுடன் ('தமிழக ஆற்றங்கரை நாகரிகம்') தொடங்கும் இத்தொகுப்பில், புலவர் த. கோவேந்தன் ('தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்'), கி.ஆ.பெ. விசுவநாதம் ('தமிழின் சிறப்பு'), ந. சஞ்சீவி ('சங்ககாலச் சான்றோர்கள்'), க. வெள்ளைவாரணனார் ('சங்ககாலத் தமிழ் மக்கள்'), ரா. ராகவையங்கார் ('தமிழகக் குறுநில வேந்தர்கள்), அ.ச. ஞானசம்பந்தன் ('மகளிர் வளர்த்த தமிழ்'), தேவநேயப் பாவாணர் ('தமிழ் வரலாறு', தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் ('தமிழ் இலக்கிய வரலாறு'), நா. வானமாமலை ('தமிழர் பண்பாடும் தத்துவமும்') உள்ளிட்ட 21 தமிழறிஞர்களின் நெடுங்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அத்தனையும் தமிழின் ஆழ அகலத்தை அறிய உதவும் அரிய கட்டுரைகள்.

ஒரு பொருள் குறித்து அறிஞர்கள் பலரும் எழுதிய கருத்துகளை ஒருசேரப் படிக்கும் வாய்ப்பை வழங்குகிறது. நூல்கள் அனைத்துமே தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டவை. அரசுப்பணி தேர்வு எழுதுவோர்க்கும், தமிழ் பயிலும் மாணவர்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படும். தமிழ் ஆர்வலர்களுக்கு ஒரு கருவூலம் எனலாம்.

***முக்குலத்தோர் சரித்திரம், தொகுப்பாசிரியர்– காவ்யா சண்முகசுந்தரம், பக். 372; ரூ.350; காவ்யா, சென்னை–24; ✆044–23726882.***




கள்ளர், மறவர், அகமுடையர் ஆகிய முக்குலத்தோர் குறித்து விரிவாகப் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது இந்த நூல். இவர்களை தேவர் என்று அழைப்பது தவிர்க்க முடியாதது என்று கூறும் நூலாசிரியர், தமிழர், திராவிடர் என்ற ஆய்வும் மாறுபட்ட கோணத்தில் விவாதமாக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பு.


கொற்றைப் பரம்பரையே பின்னாளில் குற்றப் பரம்பரையாகி விட்டதாகக் கூறுவதும் கவனிக்கத்தக்கது. மணிமேகலை காப்பியத்தில் குறிப்பிடும் நாகர் முதல் பாலை நிலத்து மறவர், சேர நாட்டு அகமுடையர் என முக்குலத்தோர் சரித்திரம் விரிந்து புதுக்கோட்டை குறுநில மன்னர்கள், நாட்டார்கள் என அவர்களது ஆளுமைகள் பிரமிக்கும் வகையில் விளக்கப்பட்டுள்ளன.

கள்ளர்களை அரையர், பல்லவர், சோழர் கலந்த இனத்தவர் எனக் குறிப்பிடுவதும், 348 பட்டப் பெயர்களை வரிசைப்படுத்தி குறிப்பிட்டிருப்பதும் வியக்க வைக்கிறது.

மறவர்கள் பாலை நிலத்து மக்கள் என்பதற்கான சான்றுகளும், போரில் முன்னின்றவர்கள் என்ற தகவல்களும் புதியது. நாயக்கர் காலத்தில் மறவர் சீமை ஒழுங்குபடுத்தப்பட்டதையும் முகம்மதியர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் மறவர்களின் நிலையையும், இப்போதைய கிளை பிரிவுகளையும் பட்டியலிட்டு விளக்கியிருப்பது சிறப்பாகும்.

அகமுடையர் என்பவர் முடியரசுக் காலத்தில் அகப்படைப்பிரிவினர், உயர்ந்த வாழ்க்கையைக் கைக்கொண்டவர்கள், லெமூரியா காலத்து மேரு மலைக் காவலர்கள் என விவரிக்கும் நூலாசிரியர், பூலித்தேவர், மருதுசகோதரர்கள் என முக்குலத்தோர் சரித்திரத்தை சாகச விடுதலை வீரர்களின் வரலாறாகவும் விளக்கியுள்ளார். முக்குலத்தோர் சரித்திரத்தை முழுமையாக வெளிப்படுத்தும் நூல்.

***எது குற்றம்?– க.மாணிக்கவாசகம்; பக்.272: ரூ.300; தஞ்சாவூர்– 613007; ✆8940533955.***




ஆயுள் தண்டனைக் கைதியின் மேல்முறையீட்டு வழக்கை நீதிபதி தன்முனைப்பாக சட்ட நுணுக்கத்துடன் ஆராய்ந்து வழங்கிய திருப்புமுனை தீர்ப்பை கருவாகக் கொண்டு இந்நாவல் உருவாக்கப்பட்டுள்ளது.

கல்லுடைக்கும் தொழிலாளியின் மகன் கருத்தாய்ப் படித்து கார்பரேட் நிறுவனத்தில் உயர்பதவி வகித்து, காதல் மணம், அழகிய குழந்தை என வசந்தமாய் செல்லும் வாழ்க்கையில், அவர் எதிர்கொண்ட எதிர்ப்புகள், எதிர்பாராத பேரிழப்புகள், புனைவு வழக்கில் ஆயுள்தண்டனை, மேல்முறையீடு என திருப்பங்களுடன் கதை நகர்கிறது. அதிலும், நீதிமன்ற விசாரணை உச்சகட்ட பரபரப்பை வாசகர்களுக்கு கடத்துகிறது.

நாவலாசிரியர் ஓய்வுபெற்ற காவல் துணை கண்காணிப்பாளராக இருந்தபோதும், 'மாமூல்' காவல் அதிகாரியின் பாரபட்ச நடவடிக்கைகளை சமரசமின்றி பதிவு செய்துள்ளார்.

குற்றவாளியாகக் கருதப்படுபவர் நொடிப் பொழுதில் நிலை பிறழ்ந்து நிகழ்த்துவது மட்டுமே குற்றம் அல்ல; அந்த நிலை நோக்கி அவரை உந்தித்தள்ளுபவர்களின் செயல்களே பிரதான குற்றம் என்பது ஆழமாக நிறுவப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்ட விதி எண் 14–ன்படி சட்டத்தின் முன் அனைவரும் சமம், சமமான சட்டப்பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது அடிப்படை. சமூக அநீதிகள், தீய சக்திகளால் பாதிக்கப்படும் அப்பாவி மனிதனுக்கு உடனடி கடவுளாகத் தெரிவது அரசாங்கத்தின் ஓர் அங்கமான காவல்துறைதான். அந்தக் கடமையில் காவல் அதிகாரிகள் கடுகளவும் தவறிவிடக் கூடாது என்பதை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது இந்த நூல்.

***பெருந்தொற்றும் பொருளாதாரக் கொள்கையும் – தொகுப்பாசிரியர் ப.கு. பாபு, பக். 352; ரூ.350, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், சென்னை– 20; ✆044– 24412589.***



கரோனா காலத்தால் நேரிட்ட பொருளாதாரச் சீர்குலைவுகளையும், மீள்வதற்கான வழிமுறைகளையும் விவரிக்கிறது இந்த நூல்.

ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 19 ஆய்வுக் கட்டுரைகளின் வழி எழுதப்பட்ட ஒவ்வொரு துறையுமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. சில கட்டுரைகளில் புள்ளி விவரங்கள் சலிப்பூட்டக் கூடியனவாகத் தென்பட்டபோதிலும் தீவிரமான பொருளியல் சார் விஷயங்கள்கூட எல்லா வாசகர்களுக்கும் எளிதில் புரிவதாகக் கூறப்பட்டிருப்பது சிறப்பு.

விவசாயக் கொள்கைச் சீர்திருத்தங்கள், வர்த்தகமும் தொழிலும் ஆகிய பிரிவுகளில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் மிகவும் கவனிக்கப்பட வேண்டியவை. வேளாண் மேம்பாட்டு நடவடிக்கைகளுடன், தற்சார்புடன் கூடிய உள்நாட்டுத் தொழில், விநியோகச் சங்கிலிகளின் மேம்பாடு முன்னோக்கிய வழிகளில் ஒன்றாகக் கட்டுரைகளில் சுட்டப்படுகிறது.

ஆடைத் தொழிலில் முன்னேற்றம் பற்றியும் கவனம் செலுத்த வேண்டிய உத்திகள் பற்றி விவாதிக்கப்படுகிறது.

1930–களின் பெரும் பொருளாதார மந்த நிலையைவிட மோசமாகவே நிலைமை மாறியிருக்கிறது. குறுகிய, நீண்ட காலப் பரிந்துரைகளை உடனடியாகப் பரிந்துரைக்கும் இந்த முயற்சியின் தொடர்ச்சியாக, கரோனா காலத்துக்குப் பிந்தைய காலத்தின் வீழ்ச்சிகள், தத்தளிப்புகள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டு ஆலோசனைகளை எடுத்துரைக்கலாம். ஆங்கிலக் கட்டுரைகளை தமிழிலும் வாசகர்களை, சென்றடைய வேண்டியவர்களைச் சென்றடையும் வகையில், மொழிபெயர்த்துத் தந்திருப்பது வரவேற்கத்தக்கது.

**அள்ள அள்ளப் பணம்–8 இன்சூரன்ஸ்- சோம. வள்ளியப்பன்; பக்: 232. ரூ.250; கிழக்குப் பதிப்பகம், சென்னை-14; ✆044-4200 9603.**




சம்பாதிப்பவர் உயிரிழக்க நேரிடும்பட்சத்தில், குடும்பத்துக்கு வரும் வருமானம் நின்று போகும். அவரை நம்பி இருந்தவர்கள் பொருளாதார நெருக்கடியில் தள்ளப்படக் கூடாது என்பதற்காக செய்யப்பட்டிருக்கும் ஒரு ஏற்பாடுதான் இன்சூரன்ஸ். பணத்தைப் பாதுகாப்பதும், அதற்கு ஆபத்து ஏற்பட்டால், அதனால் உண்டாகும் இழப்பை ஈடுகட்ட, ஏற்பாடுகள் செய்து கொள்வதும் நிதி மேலாண்மை என்பது குறித்து நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

காப்பீடு, அதனால், கிடைக்கும் பாதுகாப்பு, இழப்பு, பொதுவான சந்தேகங்களுக்குப் பதில் ஆகியன நூலில் விளக்கப்பட்டுள்ளது.

இன்சூரன்ஸ் அவசியம், வகைகள், வீட்டுக் கடனுடன் இணைந்த இன்சூரன்ஸ், குரூப் இன்சூரன்ஸ், ஜெனரல் இன்சூரன்ஸ், மெடிக்கல் இன்சூரன்ஸ், ஆக்சிடென்ட் இன்சூரன்ஸ், டிராவல் இன்சூரன்ஸ், மோட்டார் வாகன இன்சூரன்ஸ், அரசுகள் வழங்கும் இலவசக் காப்பீட்டுத் திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து எளிமையாகவும், விரிவாகவும் அனைவருக்கும் புரியும் வகையில் உள்ளது.

கரோனா தொற்று பரவலுக்குப் பிறகு இன்சூரன்ஸ் விழிப்புணர்வு வந்துள்ளது. பெரிய நிதிச் சிக்கல்களில் இருந்து காப்பாற்ற வந்த நல்ல ஏற்பாடு என்பதையும், அதிக சிரமமின்றி இழப்பீட்டுத் தொகைகள் கிடைப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நூல்தான் இது.

***கிறுக்கி– இஹ்சான் அப்துல் குத்தூஸ் (தமிழில் – அ.ஜாகிர் ஹுசைன்); பக்.143; ரூ.175; காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் – 629001, ✆04652 – 278525.***




26 சிறுகதைகளைக் கொண்டிருக்கும் இந்த நூல், வாசிப்பு தளத்துக்குள் எளிதில் இழுத்துச் செல்லும் எழுத்து நடையில் அமைந்துள்ளது.

அரபு மக்களின் பண்பாடு, துயர், வடுக்கள், உளவியலை தமிழ் வாசகனின் பார்வைக்கு வைத்திருக்கிறார் ஜாகீர் ஹுசைன்.

ரொட்டிப் பொடிக் கடை என்ற சிறுகதையில் ஒரு பாலஸ்தீன அகதியின் அகப் போராட்டம் விவரிக்கப்பட்டுள்ளது. அகதிகள் முகாமின் அனுதினப் போராட்டங்களை சிறுகதையினூடே விவரிக்கும் நூலாசிரியர், அவர்கள் எதிர்கொள்ளும் ஏமாற்றங்களையும், சலுகைகளையும் ஒருசேர வாசகனிடம் கடத்துகிறார். சுமக்க அனுமதிக்கப்பட்ட ஒரே ஆயுதம் கல்வி மட்டும்தான் என்று அக்கதையில் வரும் ஒற்றை வரியில் அவர்களது ஒட்டுமொத்த வலியையும் வாசகர்களிடம் தாரை வார்க்கிறார் அவர்.

நினைவுகளின் வீடு என்ற சிறுகதை, கணவனை இழந்த ஒரு பெண், மனைவியை இழந்த ஆணின் உளவியல் பிரச்னைகளையும், சமூக நிர்பந்தத்தால் திருமண பந்தத்தில் இணையும் அவ்விருவரும் பழைய நினைவுகளுடன் வாழ்வதையே மகிழ்ச்சியாக எண்ணி ஒருமித்து பிரிந்து செல்கின்றனர். தனி மனிதனின் வாழ்க்கையை இந்த சமுதாய சந்தர்ப்பவாதங்கள் கட்டமைத்தாலும், அதைத் தாண்டி உணர்வுகளே வெற்றி பெறும் என்பதற்கு இக்கதை ஓர் உதாரணம்.

இப்படியாக ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். குறிப்பாக 'என் வயதுகள்', 'சவ ஒப்பந்தக்காரன்', 'மகிழ்ச்சி', 'கிறுக்கி', 'மனைவியும், மகளும்' ஆகிய சிறுகதைகள் வாசகனின் மனதுடன் சிநேகிதம் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன.

அரபு மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்ள இத்தகைய நூல்கள் தமிழில் அதிகம் வெளியாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பை விதைத்திருக்கிறது இந்த நூல். ■